**செய்தி வெளியீடு எண்.2297** **நாள்: 19.12.2022**

## செய்தி வெளியீடு

### குறள் இனிது – திருக்குறள் நாட்டிய நாடகம்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அறிவிப்பான **தீராக் காதல் திருக்குறள்** என்ற திட்டத்தைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது. இதில் திருக்குறளின் சிறப்பை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் விதமாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு **குறளோவியப்** போட்டி நடத்தப்பட்டு, அவற்றுள் சிறந்த ஓவியங்கள் தினசரி நாட்காட்டியாக அச்சிடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதன் அடுத்த நிகழ்வாகத் திருக்குறளில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகளைத் திருவள்ளுவரே நேரில் தோன்றி மாணவனுக்கு எடுத்தியம்பும் வகையில் சுதா சுவர்ணலட்சுமி குழுவினரின் **குறள் இனிது** என்ற திருக்குறள் நாட்டிய நாடகம் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 21.12.2022 அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு நுழைவு கட்டணம் ஏதும் கிடையாது.

இந்நாட்டிய நாடக நிகழ்ச்சியினை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து கண்டுக்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in